பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய முறையில் இனி மேலாவது வேலைவாய்ப்பு அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன அந்த யோசனை நிச்சயமாக அந்தத் துறையினல் எற்றுக்கொள்ளப்பட முடியும். ஆனல் அதனல் பிரச்னை தீராது.

நீதிமன்றங்களுக்கு வழங்கப்படும் எழுதுபொருள்கள்

* **346 வினு—திரு. க. சுப்பு:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

நீதி மன்றங்களுக்குத் தேவையான எழுதுபொருள், அச்சுப் பாரங்கள் ஆண்டுதோறும் அனுப்பப்பட்ட பட்டியல்படி உரிய காலத்தில் வழங்கப்படுவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நீதி மன்றங்களுக்கு உரிய காலத்தில் கைவசம் இருக்கும் எல்லா எழுதுபொருள்களையும் ஆண்டுதோறும் அனுப்பி வைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. எழுதுபொருள்கள் இருப்பில் இல்லாமலிருந்து வழங்குவதற்கு இயலாமற் போயின் அத்தியாவசியத் தேவைக்குண்டான எழுதுபொருள்களை வாங்கும் விதிகளின்படி உள்ளூர் அங்காடிகளில் வாங்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தமிழக அரசின்கீழ் இருக்கும் கோர்ட்டுகள் முதலியவைகளில் இம்மாதிரி பாரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனல் மத்திய அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தில் தமிழகத்தில் இருக்கிற பிராவிடெண்ட் ஃபண்ட் போன்ற ஆபிஸ்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் ஃபார்ம்ஸ் சப்ளை செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. அந்த ஆபிஸ்களில் உடனடியாக சப்ளை செய்ய தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சம்மன்ஸ், வாரண்டுகள் போன்றவைகளுக்கான ஃபாரங்கள் காலாகாலத்திலே கோர்ட்டுகளிலே கிடைக்காத காரணத்தினல் அங்கு பல சங்கடங்களுக்கு ஆளாக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்டெண்டுகள் கோர்ட்டுகளில் இருந்து வந்தவுடனே உடனடியாக அவற்றை அனுப்ப அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் தங்கள் தேவைப்பட்டியல்களை இரண்டு மாதங்கள்

1971 ஜூலை 21]

முன்னதாக அதாவது அக்டோபர் மாதம் முதலிலேயே எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்கவேண்டும். இவ்வாறு உரிய காலத்தில் வரப்பெற்ற அனைத்துத் தேவைப் பட்டியல்களின்மீது பொருள்கள் தாமதமின்றி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது நீதிமன்றங்களில் சாட்சிகள் பெரும்பாலும் கையால் எழுதப் படுகிறது. அப்படி சாட்சிகள் எழுதப்படும் அந்தப் பேப்பர் தரக் குறைவாகயிருப்பதால் இங்க் ஊறி வார்த்தைகள் புரிய மாட்டேனென்கிறது. எனவே உயர்ந்த ரகப் பேப்பரைக் கொடுக்க அரசாங்கம் வழிவகுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதுபோன்ற குறைகள் இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. அப்படித் தெரிவிக்கப் பட்டால் ஆலோசிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட ஸ்டேஷனரி ஃபார்ம்ஸ் வாங்கப் பல அங்காடிகளில் வாங்கக்கூட அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்று கூறினார்கள். அதற்காகத் தனிப்பட்ட தொகை ஒதுக்கப் படவில்லை என்று அவர்கள் கூறுவது உண்மையா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அவ்வித உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது, அப்படி வாங்கப்பட்டும் இருக்கிறது.

Free distribution of bread to children

* 347 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI :
THIRU N. DENNIS :

Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) the criteria under which slums are selected for free distribution of bread to children; and

(*b*) the agency through which such distribution is made

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் 6 மாதம் முதல் 3 வயதுவரை உள்ள எல்லாக் குழந்தைகளும் இத்திட்டத்தின்கீழ் ரொட்டி வழங்கப்படுவதற்காகக் கணக்கெடுக்கப்பெற்றுள்ளன. ஆதலால் குடிசைப் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதில் வரையறை நிர்ணயம் செய்வது அவசியமில்லை.

(இ) அந்தந்தக் குடிசைப் பகுதிகளில் உள்ள சேரணிப்படை, கில்ட் ஆப் சர்வீஸ், செஞ்சிலுவைச் சங்கம், ரோட்டரி கிளப், அரிமா சங்கம், குழந்தைகள் நல இந்தியக் கவுன்சில் போன்ற சமூக நல நிறுவனங்கள் ரொட்டி வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அப்படிச் சமூக நல நிறுவனங்கள் இல்லாத பகுதிகளில் உள்ளாட்சி மன்றங்கள் இந்தப் பணியைச் செய்கின்றன.